பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

தினப்புயல்
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



புதுக்குடியிருப்புச் சந்தி, புதுக்குடியிருப்பு.
T.P- 0770457661

மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 28

# தீர்வின்றித் தொடரும் ஆசிரியர்களின் போராட்டம்



ஆசிரியர் தினமான ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி பாரிய ஆர்ப்பாட்டத் தொடர் ஒன்றை ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாக இலங்கை ஆசிரியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தடைகளை மீறி தொடர்ந்து தங்களது ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதாக குறித்த சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். நேற்றுடன் 84 நாட்களைக் கடந்து தங்களது ஆர்ப்பாட்டம் தொடர்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இலங்கைப் பயணிகளுக்குத் தடை நீக்கம்

இலங்கை பயணிகளுக்கு கட்டார் அரசாங்கம் விதித்திருந்த தடை நீக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் 6ஆம் திகதியில் இருந்து இலங்கை மற்றும் இந்தோனேசியா உள்ளிட்ட சில நாட்டவர்கள் தமது நாட்டிற்குள் பிரவேசிக்கலாம் என கட்டார் அரசாங்கம் அறிவித்துள்ளது.

12 வயதிற்கு மேற்பட்ட முழுமையாகத் தடுப்பூசி ஏற்றியவர்கள் 2 நாட்கள் தனிமைப்படுத்தலின் பின்னர் நாட்டிற்குள் அனுமதிக்கப்படுவார்கள் என கட்டார் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.
(அரசாங்க தகவல் திணைக்களம்)



# பஞ்சாப் கிங்ஸ் அணியை வீழ்த்தி பிளே-ஓ:ப் சுற்று வாய்ப்பை உறுதி செய்தது ரோயல் சேலஞ்சர்ஸ்



வழக்கம் போல் கடைசி நேரத்தில் பஞ்சாப் கிங்ஸ் அணி விக்கெட்டுகளை இழக்க ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் 6 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஷார்ஜாவில் நடைபெற்ற ஐ.பி.எல். கிரிக்கெட்டின் 48வது லீக் ஆட்டத்தில் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர்- பஞ்சாப் கிங்ஸ் அணிகள் பலப்பரீட்சை நடத்தின. முதலில் துடுப்பெடுத்தாடிய ஆர்.சி.பி. 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 164 ரன்கள் சேர்த்தது.

அதிரடி பெட்ஸ்மேன் மெக்ஸ்வெல் 33 பந்தில் 57 ரன்கள் அடித்தார். பஞ்சாப் கிங்ஸ் அணியில் முகமது ஷமி, ஹென்ரிக்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர். (03)

# இன்று உலக குடியிருப்பு தினம்

1986ஆம் ஆண்டுடன் ஆரம்பிக்கப்பட்ட உலக குடியிருப்பு தினம் ஒவ்வொரு ஒக்டோபர் மாதத்தின் முதல் திங்கட் கிழமையில் உலகம் முழுவதிலும் உள்ள சகல நாடுகளும் இத் தினத்தினை கொண்டாடுகின்றது.

இதன்படி இம்முறை இன்று 4 ஆம் திகதி இத் தினம் கொண்டாடப்படுகின்றது. இலங்கையிலும் இத் தினத்தில் வவுனியாவில் செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் மெனிக்பாம் பிரதேசத்தில் அருனோதய நகரம் - பிரதம மந்திரியும், வீடமைப்பு நிர்மாணம் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ, இந்திய நாட்டின் வெளியுறவுச் செயலாளர் ஆகியோரினால் கொழும்பில் உள்ள அலரி மாளிகையில் வைத்து ஸூம் தொழில்நுட்பத்தின் ஊடாக இக் கிராமம் மக்களிடம் கையளிக்கப்பட உள்ளது. (03)



தினப்புயல்
ஆசிரியர்பீடம்
இல : 154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நெற்பயிர்ச்செய்கையாளர்கள்

நாட்டில் தற்போது அனைத்து மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகள் நெல்லைப் பயிரிடுவதற்கு தத்தமது நிலத்தினை ஆயத்தப்படுத்தி வருகிறார்கள். பலர் நெல்லை விதைத்து விட்டார்கள். எமது நாட்டின் பிரதான உணவு அரிசியாகும். ஆரம்ப காலங்களில் நெல் உற்பத்தியில் உச்சக்கட்டத்தில் இருந்த எமது நாடு இன்று அண்டைய நாடுகளிடமிருந்து அரிசியினை இறக்குமதி செய்யவேண்டிய நிலையில் உள்ளது.

நாட்டுக்குத் தேவையான அரிசி கையிருப்பில் போதாமையின் காரணமாகவே இந்நிலை இன்று ஏற்பட்டுள்ளது. இதற்குக் காரணமானவர்கள் யார்?

புதிதாக பதவியேறிருக்கும் அரசாங்கம் தற்போது உர இறக்குமதியினைத் தடை செய்திருக்கிறது. நெற்பயிர்ச்செய்கைக்கான உரத்தினை எவ்வாறு பெறுவது? இதற்கானத் தீர்வு என்ன?

கொவிட் வைரசின் பரவலால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்கிற காரணத்திற்காக அனைத்துப் பொருட்களுக்கும் அத்தியாவசியப் பொருட்களுக்கும் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இன்று நெற்பயிர்ச்செய்கைக்கான மருந்து. உரம் போன்றன பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில். இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ள நிலையில் எவ்வாறு உரத்தினை விவசாயிகள் பெறுவது என்கிற கேள்வி எழுந்துள்ளது.

விவசாயிகள் நெற்பயிர்ச் செய்கையைக் கைவிடும் அளவிற்கு அரசின் இந்த திடீர் நடவடிக்கை மாறியிருக்கிறது. இயற்கை உரம் ஆரோக்கியமானது. அரசின் திட்டம் சிறந்தது என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால் இவ் செயற்பாட்டை உடனடியாக நாட்டில் அமுல்படுத்த முடியாதல்லவா?

ஆட்சியாளர்களுக்கு இவ் விடயங்கள் தெரிந்திருந்தும் அசமந்தப்போக்கினைக் கடைப்பிடிப்பது தமது சுயநலத்திற்காகவா என்கிற கேள்வியும் எழுந்துள்ளது. உள்நாட்டில் உற்பத்திகளை அதிகரிக்காமல் வெறுமனே வெளிநாடுகளில் இருந்து இறக்குமதிகளை மாத்திரம் செய்துகொண்டிருந்தால் இந்நாட்டின் பொருளாதாரம் எவ்வாறு வளர்ச்சியடையும். இன்று பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்களும் இவ் உரத் தடையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தேயிலை உற்பத்தியாளர்கள் இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். வேலைவாய்ப்பினை வழங்குவதில் அங்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது. அரசின் இவ்வாறான செயற்பாடுகள் தொடருமானால் நாடு மேலும் மேலும் பாதாளத்துக்குள் தள்ளப்படும் என்பதுவே உண்மை.

# நாடு திரும்பினார் ஜனாதிபதி



**ஐக்கிய நாடுகளின் 76ஆவது பொதுச் சபை அமர்வில் பங்கேற்பதற்காக அமெரிக்காவுக்கு பயணமான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் நாடு திரும்பியுள்ளார்.**

## ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலையின் கல்வித்துறைகள் விஸ்தரிப்பு

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம், பாகிஸ்தானின் காம்சாட்ஸ் பல்கலைக் கழகத்துடனான புரிந்துணர்வு ஆவணத்தில் அண்மையில் கையெழுத்திட்டது.

இந்த நடவடிக்கை மூலம் உயிரியல் பொருட்கள், திசு பொறியியல், மறுசீரமைப்பு மருத்துவம், உணரிகள் மற்றும் உயிரியல் உணரிகள் மற்றும் அதனுடன் இணைந்த துறைகள் ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் எதிர்பார்க்கிறது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கொத்தலாவல பாது காப்பு பல்கலைக்கழகத் தின் சார்பில் அதன் உப வேந்தர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ் மற்றும் கொம்சாட்ஸ் பல்கலைக்கழகத்தின் சார்பில் அப்பல்கலைக் கழகத்தின் ரெக்டர் பேராசிரியர் டொக்டர் முஹம்மது டி.அப்சல் ஆகியோர் கைச்சாத்திட்டதாக கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அரசாங்க தகவல் திணைக்களம்)



**நாட்டில் மேலும் 40 கொவிட் மரணங்கள் நேற்று (03.10.2021) பதிவாகியுள்ளன. இதற்கமைய நாட்டில் பதிவாகியுள்ள கொவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13,059 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் நேற்று 802 பேருக்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது. இதற்கமைய இதுவரை அடையாளம் காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 520,432 ஆக அதிகரித்துள்ளது.**

# இன்றும் மழை பெய்யக்கூடிய சாத்தியம்

மேல், சப்ரகமுவ, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகல் வேளையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 75 மி.மீக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக் கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன். காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 10-30 கிலோ மீற்றர் வரை காணப்படும். காலியிலிருந்து மாத்தறை ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

காலியிலிருந்து மாத்தறை ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.

அனுராதபுரம் – பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மட்டக்களப்பு – பி.ப. 2.00மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

கொழும்பு - அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

காலி - அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

யாழ்ப்பாணம் - மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

கண்டி - பி.ப. 2.00மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

நுவரெலியா - பி.ப. 2.00மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

இரத்தினபுரி – அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

திருகோணமலை – பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மன்னார் - அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

(வளிமண்டலவியல் திணைக்களம்)

## உலக குடியிருப்பு...

இக்கிராமத்திற்கு சகல அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. செட்டிக்குளம் பிரதேச செயலாளரினால் 24 குடும்பங்களுக்கு அரச காணி துண்டுகள் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது. இக் குடும்பங்கள் கடந்த கால யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த குடும்பங்களாகும். இவ் வீடமைப்புத் திட்டத்தில் 24 வீடுகள் உள்ளடக்கப் படுகின்றன. அத்துடன் உள்ளக பாதைகள், குடிநீர், மின்சாரம் போன்ற உள்ளக கட் டமைப்பு வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக தேசிய வீடமை ப்பு அபிவிருத்தி அதிகார சபை 34.88 மில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது. அதில் இந்திய உதவித் திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவ் வீடமைப்புத்திட்டத்தினை நேரடியாக வவுனியாவிற்கு வீடமைப்பு நிர்மாண மற்றும் கட்டிடப் பொருட்கள் இராஜாங்க அமைச்சர், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய தூது வராலயத்தின் துணைத் தூதுவரும் கலந்துகொண்டு வீடுகளுக்கான திறப்புக்களை உரிய குடும்பங்களிடம் கையளிப்பார்கள்.

உலக குடியிருப்பு தினம் 1986 ஆம் ஆரம்பிக்கப்பட்டு இந்த வருடத்துடன் 35 வருடங்கள் நிறைவடைகின்ற நிலையில் ஐக்கிய நாடுகள் மனித குடியிருப்பு அமையம் இவ் ஆண்டின் தொனிப்பொருளாக காபன்வாயு அற்ற ஓர் உலகின் நகர செயற்பாடுகள் (Accelerating Urban Action for a Carbon free world) இத் தொனிப்பொருளில் 70 க்கும் மேற்பட்ட நாடுகளில் நகரமயமாக்குதல், கட்டிடங்கள், நிர்மாணப் பொருட்களுக் காக இயற்கைச் சூழலை மாசுபடுத்தல், நகரில் நிரம்பிய வாகனங்கள் ஆகாய போக்கு வரத்துக்கள், மின்சக்தி வளங்கள், எரிவாயு உற்பத்திகள் போன்ற தொழிற்சாலைகள் கழிவுகள், மற்றும் காலநிலை மாற்றங்களை கட்டுப்படுத்தி நகரங்களில் பச்சைத் தாவ ரங்களை நாட்டி கிரீன் பீல்ட் திட்டங்களை ஏற்படுத்துதல் மற்றும் இயற்கை வளங்களை அழிக்காது அதனை அவ்வாறே பாதுகாப்புடன் ஓர் திட்டமிட்ட மனித குடியிருப்புக்கு ஏற்ற வகையில் நகரங்களை திட்டமிடல் போன்ற திட்டங்களை உலக குடியிருப்பு அமையம் இவ் ஆண்டும் சகல நாடுகளுக்கும் முன்னிலைப்படுத்தியுள்ளன.

இயற்கை அன்னை அளித்த பெரும் செல்வமும் புவியின் மேற்பரப்பில் காணக்கூடியதாக உள்ள குன்றுகள், மலைகள், மலைத் தொடர்கள், மேட்டு நிலங்கள், சமவெளிகள், ஆறுகள், ஏரிகள், விருட்சங்கள் என்பவைகளையே நாம் சூழல் என கருது கின்றோம். மனிதனின் தேவைகளையும் சேவைகளையும் நிறைவேற்றும் நோக்குடன் தற்காலத்தில் சூழல் எனும் எண்ணக்கரு கட்டிடங்கள் நகரங்கள் குடியிருப்புகள் பூங்காக் கள் பெருந்தெருக்கள், நீர் தேக்கங்கள், குளங்கள் என்பவற்றையே சூழலாக நம் கண் முன்கொண்டு வருகின்றன.

அந்த வகையில் சூழலானது மனிதனின் அடிப்படைத் தேவைகளாகிய நீர்த்தேவை, உடைத்தேவை, உணவுத்தேவை உறைவிடத் தேவை என்பவற்றை உள்ளடக்கியதாக புவித்தொகுதி காணப்படுகின்றது. மேலும் வளிக்கோளம், நிலக் கோளம் என்பவற்றை உள்ளடக்கியதாக உயிர்கோளம் காணப்படுகின்றது. சூழலானது பரந்து விரிந்து ஒரு நிலப்பரப்பு என நாம் கருதினோமானால் அதை சுத்தமாக வைத் திருக்க வேண்டியது மானிடர் ஒவ்வொருவரினதும் கடமையாகும். அதன்படி சூழலை ஒரு கண்ணோட்டத்தில் பார்வையிடும்போது அதன் ஒவ்வொரு நன்மை, தீமைகளையும் அறிந்து கொள்ள முடியும்.

இலங்கையின் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி திட்டம் ஒன்றினை அமுல்படுத் திய இலங்கையின் அப்போதைய பிரதம மந்திரியாக பதவி வகித்த காலம் சென்ற ரணசிங்க பிரேமதாச, 1985 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவு ஜமெய்க்காவின் கிங்ஸ்டன் நகரில் இடம் பெற்ற ஐக்கிய நாடுகள் மனித குடியிருப்பு ஆணைக்குழு கூட்ட அமர்வின் போது முன்வைக்கப்பட்ட ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட உலக குடியிருப்பு தினம் இற்றைக்கு 35 வருடங் களுக்கு முன்னர் அதாவது 1986 ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி திங்கட்கிழமை முதற் தடவையாக உலகம் பூராகவும் நினைவு கூறப்பட்டது. அன்று தொடக்கம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தின் முதலாவது திங்கட் கிழமையை உலக குடியிருப்பு தினம் சகல நாடுகளிலும் கொண்டாடப்படுகின்றது.

ஒரு மனிதன் இப் பூமியில் எப்போது தோற்றம் பெற்றானோ அவனுக்கென்று ஒரு முகவரி இருத்தல் வேண்டும். ஒவ்வொருவருக்கும் குடியிருப்பதற்கு வீடு இருப்பது அவனது அடிப்படை உரிமையாகும் என ஐநா.மனித குடியிருப்பின் நோக்கத்திற்கமைய எமது நாட்டில் உள்ள சனத்தொகைக் கேட்ப வீடுகள் இருத்தல் வேண்டும். ஆனால் சனத் தொகை பெருகப் பெருக மனிதன் வீடுகளை நிர்மாணிப்பதற்காக இயற்கை வளங்களை அழிக்கின்றான். சிலர் பாதை ஓரங்களில், மனித குடியிருப்புக்கு பொருத்தமற்ற கூடாரங்கள், பஸ் நிலையங்கள், லயன் அறைகள், புகையிரத நிலையங்கள், கடற் கரையோரங்களிலும் குடும்பம் குடும்பமாக வாழ்ந்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இலங்கையில் கூட வீடுகள் அற்ற குடும்பங்களுக்காக மேலும் 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட வீடுகளை நிர்மாணிக்க வேண்டியுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்டோர்கள் வாடகை வீடுகளிலும், சட்ட விரோத கொட்டில் களிலும், முடுக்கு வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

அடுத்த ஐந்து வருடத்திற்குப் பிறகு இத் தொகை இரட்டிப்பாகலாம். ஆகவே இப் பிரச்சினைக்கு அரசாங்கம் நிலையானதொரு தீர்வுத் திட்டத்தினை வகுத்து வீடுகள் அற்ற குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்தல் வேண்டும். இப் பிரச்சினைக்கு முக் கிய காரணம் கொழும்பு, கண்டி நகர பிரதேசங்களில் அரச தனியார் காணிகள் இல்லா மையாகும். இவற்றுக்குத் தீர்வு தொடர் மாடி வீடுகளை நிர்மாணிப்பதே சிறந்த வழியாகும்.

[ஆக்கம் – அஷ்ரப். ஏ. சமத்]

## முதியோர்களை கௌரவிக்கும் நிகழ்வு



*(பைஷல் இஸ்மாயில்)*

*சர்வதேச முதியோர் தினத் தினையொட்டி அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பிர தேசங்களில் வசிக்கும் 100 வய தினைக் கடந்த சிரேஷ்ட பிரஜைகள் பலர் கௌரவிக்கப்பட்டனர்.*

*பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமட் ஷாபிரின் ஆலோசனைக் கமைவாக பிரதேச செயலக முதி யோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தி யோகத்தர் எம்.ஏ.எம்.கைஸினால் ஏற்பாட்டு செய்யப்பட்ட இந்த கௌர விப்பு நேற்று இடம்பெற்றது.*

*இதன் போது அட்டாளைச் சேனை 08 ஆம் பிரிவில் வசிக்கும் யூசுப் லெப்பை உதுமாலெப்பை (100வயது), அட்டாளைச்சேனை 01 ஆம் பிரிவில் வசிக்கும் ஏ.எல்.சுலை மாலெப்பை (104வயது), பாலமுனை 01 ஆம் பிரிவில் வசிக்கும் அவ்வா உம்மா (104வயது) உள்ளிட்ட பலரை அவர்களுடைய வீட்டிற்குச் சென்று பொன்னாடை போர்த்தி பரிசுப் பொருட்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.*

*இந்நிகழ்வில் அட்டாளைச் சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமட் ஷாபிர், உதவிப் பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத் தர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.*

*முதியோர் தினத்தில் முதி யோர்களை வீடு தேடிச் சென்று கௌரவிக்கும் நிகழ்வு அட்டாளைச் சேனை பிரதேச செயலக வரலாற்றில் இடம்பெற்றது இதுவே முதற்தட வையாகும் என்பதும் குறிப்பிடத் தக்கது.*

## பஞ்சாப் கிங்ஸ் அணியை...

பின்னர் 165 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் பஞ்சாப் கிங்ஸ் அணி களம் இறங்கியது. தொடக்க வீரர்களான கே.எல். ராகுல், மயங்க் அகர்வால் ஆகியோர் சிறப்பான தொடக்கம் கொடுத்தனர். ஸ்கோர் 10.5 ஓவரில் 91 ரன்னாக இருக்கும்போது கே.எல். ராகுல் 35 பந்தில் 39 ரன்கள் எடுத்து ஆட்ட மிழந்தார். அடுத்து வந்த பூரண் 3 ரன்னிலும் ஏமாற்றம் அளித்தார்.

சிறப்பாக விளையாடிய மயங்க் அகர்வால் 42 பந்தில் 57 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அப்போது பஞ்சாப் அணி 15.2 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 114 ரன்கள் எடுத்திருந்தது. அதன்பின் பஞ்சாப் அணியால் வெற்றி நோக்கி செல்ல முடியவில்லை.

கடைசி ஓவரில் 19 ரன்கள் தேவைப்பட்டது. ஆனால் 12 ரன்கள் அடிக்க 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 158 ரன்கள் சேர்த்தது. இதனால் ரோயல் சேலஞ் சர்ஸ் பெங்களூர் 6 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பிளே-ஓ.'.ப் சுற்று க்கு முன்னேறியது. [அப்துல் ஜெப்பார் அப்துல்லா]

## 3000 பாடசாலைகளை மீள ஆரம்பிக்கத் தீர்மானம்

200க்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட ஆரம்ப பிரிவுப் பாட சாலைகள், 100க்கும் குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளை உள்ளடக்கி 3,000 பாடசாலைகளின் கற்றல் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சருக்கும், சகல மாகாண ஆளுநர்களுக்கும் இடையில் (02) பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

இதன்படி, அதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக்கொடுப் பது தொடர்பில் குறித்த கலந்துரையாடலின்போது விசேட அவதானம் செலுத் தப்பட்டுள்ளது.

## விரைவில் 15-19 வயதுக்குட்பட்டவர்களுக்குத் தடுப்பூசி

நாட்டிலுள்ள 15 வயது முதல் 19 வயதுக்குட்பட்ட அனைத்து மாணவர்களுக் கும் தடுப்பூசி செலுத்துவது தொடர்பான ஆலோசனையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இந்த வாரம் வழங்கவுள்ளார்.

இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார். 12 முதல் 19 வயதிற்குட்பட்ட நாட்பட்ட நோய்களைக் கொண்ட சிறுவர்களுக்கு தற் போது தடுப்பூசி செலுத்தப்படுகிறது. அவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் பணிகள் நிறை வடைந்ததும், 15 முதல் 19 வயதிற்கு இடைப்பட்ட சகலருக்கும் தடுப்பூசியினை வழங்குவ தற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

## இந்தாண்டு 3 முக்கிய செயற்கை கோள்கள் ஏவப்படும் - இஸ்ரோ



இந்தாண்டில் உள்நாட்டு தொழில் நுட்பங்களுடன் பூமியை கண்காணிக்கும் 3 முக்கிய செயற்கைக் கோள்கள் ஏவப்படும் என இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளார். முதலில் இ.ஒ.எஸ்-4 (ரைசாட்-1ஏ) மற்றும் இ.ஒ.எஸ்-6 (ஓசியன் சாட்-3) ஆகிய செயற்கைக்கோளும் இஸ்ரோவின் பி.எஸ்.எல்.வி. ரொக்கெட் மூலம் ஏவப்பட உள்ளது.

அடுத்து இ.ஒ.எஸ்-2 (நுண் செயற்கைக்கோள்) செயற்கைக் கோளான முதல் சிறிய செயற்கைக்கோள் ரொக்கெட் (எஸ்.எஸ்.எல்.வி.) மூலம் ஏவப்பட உள்ளது. எஸ்.எஸ்.எல்.வி ராக்கெட்டில் ஏவப்படும் செயற்கைக்கோளின் செயல்பாடு தகுதி குறித்து சோதனை நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. மற்ற சோதனை நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன.


இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளதாவது, பூமியை கண்காணிக்கும் 3 முக்கிய செயற்கைகோள்கள் உள்நாட்டு தொழில்நுட்பங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இறக்குமதியைக் குறைப்பதற்கான எங்கள் முயற்சியின் ஒரு பகுதியாக செயற்கைக் கோள்களை கண்காணிக்கவும், தகவல்களை பரிமாற்றம் செய்ய பயன்படும் கருவி, பயண அலை குழாய் பெருக்கிகள் மற்றும் சுற்றறிக்கைகள் ஆகியவை உள்நாட்டு தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. தொழில்நுட்ப கோளாறுகள் குறித்து கண்டுபிடிக்க விரிவான சோதனைகள் நடத்தப்பட்டு வருவதாக அவர் கூறினார்.

## உலக தலைவர்கள் ஊழல் அம்பலம் - வெளியானது ரகசிய ஆவணங்கள்

உலக நாடுகளின் அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் உள்ளிட்டோர் முறைகேடாக கோடிக்கணக்கான ரூபாயை வெளிநாடுகளில் முதலீடு செய்த ஆவணங்கள், 'பண்டோரா பேப்பர்ஸ்' என்ற பெயரில் நேற்று வெளியானது.

இது, உலகம் முழுதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள், சொந்த நாட்டில் வரி ஏய்ப்பு செய்து வெளிநாடுகளில் முதலீடு செய்யும் தகவலின் ரகசிய ஆவணங்கள், 2016ல் வெளியாகி சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பனாமா நாட்டைச் சேர்ந்த சட்ட ஆலோசனை நிறுவனமான மொசாக் போன்செகா, ஒரு கோடிக்கும் அதிகமான ரகசிய ஆவணங்களை, 'பனாமா பேப்பர்ஸ்' என்ற பெயரில் 2016ல் வெளியிட்டது.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும் இந்த முறைகேடுகளை அம்பலப்படுத்தியதில் முக்கிய பங்கு வகித்தனர். பல தனிநபர்கள், நிறுவனங்களின் முறைகேடுகள் இதில் வெளியாகின. பாக்., முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் உள்ளிட்ட பிரபலங்களின் பெயர்கள் இதில் இடம் பெற்றிருந்தன. இந்நிலையில் அதேபோல் நேற்று பண்டோரா பேப்பர்ஸ் என்ற பெயரில் ரகசிய ஆவணங்கள் வெளியிடப்பட்டன.
பாகிஸ்தான் அமைச்சர்கள் கோடிக்கணக்கில் சொத்துக்களை குவித்துள்ளதாகவும், அறக்கட்டளை என்ற பெயரில் பல கோடி



ரூபாய் ஊழல் செய்திருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஜோர்டான் மன்னர் அப்துல்லா, பிரிட்டன் முன்னாள் பிரதமர் டோனி பிளேர் மற்றும் அவரது மனைவி ஷெரி பிளேர், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின். செக் குடியரசு பிரதமர் ஆண்ட்ரேஸ் பாபிஸ், கென்யா ஜனாதிபதி உஹூரு உள்ளிட்டோர் பல கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடாக சொத்து குவித்துள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், சைப்ரஸ் நாட்டு அதிபர் நிக்கோஸ் அனஸ்தேசியேட்ஸ், உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, ஈக்வடார் ஜனாதிபதி கில்லர்மோ லாசோ உட்பட பல நாடுகளின் அரசியல் தலைவர்கள், தொழில் அதிபர்கள் செய்துள்ள முறைகேடுகள் குறித்த ஆவணங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இந்தியாவைச் சேர்ந்த தொழில் அதிபர்கள், மக்கள் பிரதிநிதிகள், விளையாட்டு பிரபலங்கள் உட்பட, 300க்கும் மேற்பட்டோரின் பெயர்களும் இதில் இடம் பெற்றுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

## கொத்துக்கொத்தாக இறந்து விழுந்த ஆயிரக்கணக்கான உயிரினங்கள்

ஐரோப்பிய நாடான கிரீமியாவில் திடீரென ஆயிரக்கணக்கான பறவைகள் இறந்து விழுந்ததால் இயற்கை ஆர்வலர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். அந்நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள சிவாஷ் ஏரிப் பகுதியில் இந்த நிகழ்வு நடந்துள்ளது.

இதுகுறித்து ஆய்வு நடத்தி வரும் கிரிமியன் பெடரல் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, 7 ஆயிரம் கருப்புக் கழுத்து வாத்துக்கள், 300க்கும் அதிகமான பட்டைத் தலை வாத்துக்கள், 200 முதல் 300 எண்ணிக்கையிலான சாதாரண கடற்புறாக்கள், நூற்றுக்கும் அதிகமான கஸ்பியன் கடற் புறாக்கள் இறந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக பறவைகள் இறப்பிற்கு விஷ உணவு அல்லது நோய்த் தொற்று காரணமாக இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

## உலக வங்கியின் முன்னாள் சி.இ.ஓவிடம் விசாரணை




உலக வங்கியின் முன்னாள் தலைமைச் செயல் அதிகாரியும், சர்வதேச நிதியத்தின் நிர்வாக இயக்குனருமான கிறிஸ்டலினா ஜியார்ஜிவா, தொழில் நடத்த ஏற்ற நாடுகள் பட்டியலை சீனாவுக்கு ஆதரவாக மாற்ற உலக வங்கி ஊழியர்களுக்கு அழுத்தம் கொடுத்ததாக புகார் கிளம்பியது. அது பற்றி வரும் வாரத்தில் அவரிடம் தீவிர விசாரணை மேற்கொள்ள உள்ளனர்.

உலக வங்கி ஆண்டுதோறும் தொழில் நடத்த ஏற்ற நாடுகளை தரவரிசைப்படுத்தி அறிக்கை அளிக்கும், தொழில் தொடங்குவதில் எளிமை, கட்டுமான அனுமதி, மின்சார வசதி பெறுதல், சொத்துக்களை பதிவு செய்தல், கடன் பெறுதல், வரி செலுத்துதல் உள்ளிட்ட 12 அம்சங்களை வைத்து நாடுகளுக்கு ரேங்க் தந்திருப்பார்கள். இதன் மூலம் முன்னணியில் உள்ள நாடுகளுக்கு வெளிநாட்டு முதலீடுகள் உள்ளிட்ட பல நன்மைகள் கிடைக்கும். இவ்வாறு 2018ம் ஆண்டு வெளியான தரவரிசையில் முறைகேடுகள் நடந்திருப்பது சமீபத்தில் வெளிச்சத்திற்கு வந்தது.

இது பற்றி விசாரித்து அறிக்கை அளிக்க அமெரிக்காவின் வில்மர்ஹேலே சட்ட நிறுவனத்தை உலக வங்கி நியமித்தது. அவர்களது விசாரணையில், அப்போதைய உலக வங்கித் தலைவர் ஜிம் யாங் கிம் மற்றும் சி.இ.ஓ., கிறிஸ்டலினா ஜியார்ஜிவா ஆகியோரின் அழுத்தத்தின் பேரில் உலக வங்கி ஊழியர்கள் சீனாவுக்கு சாதகமாக தரவரிசையை மாற்றியது தெரிந்தது. அமெரிக்கா, ஜப்பானுக்கு அடுத்ததாக சீனா உலக வங்கியின் பங்குதாரராகும். இந்த நிலையில் தான் 2018ம் ஆண்டு தொழில் நடத்த உகந்த நாடுகள் பட்டியலில் சீனா 85வது இடத்திலிருந்து 78வது இடத்திற்கு முன்னேறியது குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து 2022க்கான பட்டியலை நிறுத்துவதாக உலக வங்கி அறிவித்துள்ளது. தன் மீதான குற்றச்சாட்டுகளை உலக வங்கியின் முன்னாள் சி.இ.ஓ.,வும், தற்போதைய சர்வதேச நிதியத்தின் நிர்வாக இயக்குனருமான கிறிஸ்டலினா ஜியார்ஜிவா மறுத்துள்ளார். "இதுபோன்ற தவறான குற்றச்சாட்டுகளால் அவர் பணியை தடுக்க முடியாது. சர்வதேச நிதியத்தின் முக்கிய பணிகளை ஆற்ற அவர் கடமைப்பட்டுள்ளார்" என்று அவரது செய்தித் தொடர்பாளர் கூறினார். இந்த வாரம் சர்வதேச நிதியத்தின் இயக்குனர் குழு, கிறிஸ்டலினாவிடம் நேரடியாக கேள்வி எழுப்ப உள்ளது.

## பிரான்ஸ் நாட்டுக்கான தூதரை திரும்ப அழைத்த அல்ஜீரியா

பிரான்ஸ் நாட்டுக்கான அல்ஜீரியா தூதரை அந்நாட்டு அரசு மீண்டும் அழைத்துள்ளது. அல்ஜீரியா நாடு குறித்து பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் சர்ச்சைகுரிய கருத்து ஒன்றை தெரிவித்திருந்தார். அதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் அல்ஜீரியா நாடானது பிரான்ஸூக்கான தங்கள் நாட்டுத் தூதரை திரும்ப அழைத்துள்ளது.

காலனியாதிக்கத்தின்போது பிரான்ஸ் நாட்டினர் அல்ஜீரியாவில் இனப்படுகொலையில் ஈடுபட்டதாக அந்நாட்டு அதிபர் அலுவலகம் மீது குற்றம் சாட்டப்பட்டது. மேலும் அகதிகளை ஏற்க மறுப்பது மற்றும் அல்ஜீரியா உள்ளிட்ட நாடுகளின் அகதிகளின் பிரான்ஸ் நாட்டுக்கு வருவதற்கு தடை உள்ளிட்ட காரணங்களால் இரு நாட்டினர் இடையே பதற்றமான சூழல் அதிகரித்து வருவதாக கூறப்படுகிறது.

## இலங்கை வருகின்றது உலகின் மிகப்பெரிய அசையும் சொத்து

உலகின் மிகப்பெரிய அசையும் சொத்தான Ever Ace கொள்கலன் கப்பல் நாளை 05 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது. 400 மீற்றர் நீளமும் 62 மீற்றர் அகலமும் உள்ள இந்த மிதக்கும் தீவு 23,992 கொள்கலன்களை சுமந்துகொண்டு வருகின்றது.

நெதர்லாந்து ரொட்டர்டாம் துறைமுகத்திலிருந்து சுயெஸ் கால்வாயூடாக வந்து கொழும்பு துறைமுகத்தை அடையும்.

உலகின் 24 துறைமுகங்கள் மட்டுமே இந்தக் கப்பலை கையாள முடியும். அதில் தெற்காசிய வலயத்தில் கொழும்பு துறைமுகத்தில் மட்டுமே இந்தளவு பிரமாண்டமான கப்பலை அனுமதிக்கும் ஆழமும் கொள்ளளவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.